# கொள்முதல் அறிவித்தல்

**கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு**

**இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்**

CFHC

## புரானவெல்ல மீன்பிடித் துறைமுகத் தளத்தில் உள்ள பாறைகளை உடைத்து அகற்றுவதற்கான விலைமனுக்கோரல்

## (Breaking and removal of rock in the harbour basin at Puranawella Fishery Harbour)

## கொள்முதல் இல : *(CFHC/PD/RFQ/BRRPRW/2026-14)*

இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் சார்பாக திணைக்களத்தின் கொள்முதல் குழுவின் தலைவரினால் புரானவெல்ல மீன்பிடித் துறைமுகத் தளத்தில் உள்ள பாறைகளை உடைத்து அகற்றுவதற்கான விலைமனுக்கோரல் தகுதியான மனுதாரர்களிடமிருந்து தேசிய போட்டி முறையின் கீழ் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. தொடர்புடைய விவரக்குறிப்புகள் பின்வருமாறு.

| தொ / இல. | விபரம் மற்றும் கொள்முதல் இலக்கம் | பொறியியலாளர் மதிப்பீட்டு செலவு மற்றும் காலம் | விலைமனு பிணைத்தொகை | மனுக்கள் செல்லுபடியாகும் காலம் | மீள்ச் செலுத்தப்படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | புரானவெல்ல மீன்பிடித் துறைமுகத் தளத்தில் உள்ள பாறைகளை உடைத்து அகற்றுவதற்கான விலைமனுக்கோரல்<br>**கொள்முதல் இலக்கம் :** (CFHC/PD/RFQ/BRRPRW/2026 -14) | ஒப்பந்த காலம் - **60 நாட்கள்** | பெறுமதி ரூ.150,000.00<br>வழங்கப்பட்டுள்ள மாதிரிக்கமைய செல்லுபடியாகும் காலம் **2026.08.10** | விலைமனு ஏற்றுக்கொள்ளப் படும் இறுதி திகதியிலிருந்து **2026.07.13** ஆம் திகதி வரை செல்லுபடியாகும். | ரூ.3,500.00 |

இதற்காக ஆர்வம் காட்டும் தகுதிவாய்ந்த வழங்குநர்கள் / பெயரிடப்பட்ட முகவர்கள் அல்லது பெயரிடப்பட்ட முகவர்களுக்காக **2026.03.31 ஆம் திகதி** முதல் **2026.04.27 ஆம் திகதி வரை அலுவலக வேலை நாட்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 மணி** வரை தலைமை அலுவலகத்தில் அல்லது முகாமையாளர் **(புராணவெல்ல மீன்பிடித் துறைமுகம்)** எனும் இடத்தில் எழுத்துமூலம் கோரிக்கை ஒன்றினை முன்வைப்பதன் மூலம் அல்லது **மீள்செலுத்தப்படாத ரூ.3,500.00** கட்டணத்தினை செலுத்துவதன் மூலமாக விலை மனு கொள்முதல் ஆவணத்தினை பெற்றுக்கொள்ள முடியும்.

1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 08 ஆம் பிரிவின் படி, பொது ஒப்பந்தப் பதிவேட்டினால் வழங்கப்படும் சான்றிதழ் **(ஒப்பந்தம் ரூபா ஐந்து மில்லியனை விட அதிகமாக காணப்படும் சந்தர்ப்பத்தில்)** பெற்றிருத்தல் இருத்தல் வேண்டும்.

விலைமனுப் பிணையானது, கொள்முதல் நிறுவனத்தின் முதல் எழுத்து மூல கோரிக்கையின் பேரில் நிபந்தனையின்றி பணமாக மாற்றக்கூடிய, இலங்கையில் செயற்படும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன், அது **தலைவர், இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனம், இல.15, ரொக்ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு 15** என்ற பெயருக்கு விநியோகிக்கப்படல் வேண்டும், மனுப் பிணையானது, பண வைப்பாகவும் (இலங்கை ரூபாவில்) செலுத்தப்படல் வேண்டும் மேலும் தலைமை அலுவலகத்திலோ அல்லது முகாமையாளர் (புராணவெல்ல மீன்பிடித் துறைமுகத்திலோ) உள்ள காசாளரிடம் செலுத்தப்பட்ட பண ரசீதின் அசல் பிரதியின் நகல் விலைமனுவுடன் இணைக்கப்படல் வேண்டும்.

**மனு ஆவணங்களை தலைமை அலுவலகத்தில் அல்லது முகாமையாளர் (புராணவெல்ல மீன்பிடித் துறைமுகத்தில்)** உரிய கொள்முதல் ஆவணத்தினை இலவசமாக பரீட்சிக்க முடியும்.

கொள்முதல் ஆவணப் **பிரதிகள் இரண்டினை** அசல் மற்றும் நகல் எனக் குறிப்பிட்டு வெவ்வேறாக உறைகளில் இட்டு அவற்றை தனியொரு உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

இது குறித்தான முன்மனுக்கூட்டம் 2026.04.10 **ஆம் திகதி மு.ப.11.00 மணிக்கு இலங்கை மீன்பிடித் துறைமுகத்தின் தலைமை அலுவலகத்தில் முதலாம் மாடியில் பணிப்பாளர் குழுக் கூட்டம் நடைபெறும் மண்டபத்தில் நடைபெறும்.**

முறையாக கையொப்பமிடப்பட்டு இரப்பர் முத்திரையிடப்பட்ட மனு ஆவணத்தினை கடித உறையிலிட்டு அதன் இடதுக்க மேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தின் பெயரினை குறிப்பிட்டு 2026.04.28 **ஆம் திகதி மு.ப.11.00** மணிக்கு முன்னர் அல்லது கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது இலங்கை மீன்பிடித் துறைமுகத்தின் தலைமை அலுவலகத்தின் இரண்டாம் மாடியில், கொள்முதல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இட வேண்டும்.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட கொள்முதல் ஆவணம் 2026.04.28 **ஆம் திகதி மு.ப.11.00 மணிக்கு கொள்முதல் பிரிவில்** மனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும். தாமதமாக கிடைக்கப்பெறும் கொள்முதல் ஆவணங்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமல் திருப்பி அனுப்பப்படும். குறித்த கொள்முதல் ஆவணங்களை முழுமையாக அல்லது பகுதியாக ஏற்கும் அல்லது நிராகரிக்கும் உரிமையினை ஆணைக்குழு கொண்டுள்ளது.

இதற்காக ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை **0112-529391** மற்றும் **0112-525063** எனும் தொலைப்பேசி இலக்கங்களினூடாக பெற்றுக்கொள்ள முடியும்.

தலைவர்,
திணைக்களத்தின் கொள்முதல் குழு,
இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்,
இல-15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை,
கொழும்பு 15.

SELACINE

Scanned with CamScanner